**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 20/2020 |
| Name | : K.Maheswaran (Pollachi Branch Manager) |
| D.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.11.2024

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பொள்ளாச்சி ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் கிளை துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் படி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு வந்த அழைப்பாணையில் பங்கஜவள்ளி க/பெ.பாலகிருஷ்ணன் வங்கி கணக்கு எண். 11103990396 என்ற வங்கி கணக்குள்ளவரின் வங்கி கணக்கு துவக்க படிவம் மற்றும் அந்த படிவத்தில் உள்ள அவரது Specimen Signature விவரங்களை கேட்டு அழைப்பாணை அனுப்பட்டிருந்தது. **மேற்படி பங்கஜவள்ளியின் வங்கி கணக்கு துவக்க படிவம் அதில் உள்ள Specimen Signature அடங்கிய படிவம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1 காசோலையானது எங்களது வங்கியால் எதிரி பங்கஜவள்கிக்கு கொடுக்கப்பட்ட காசோலை என்றால் சரிதான்.

காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யும் போது காசோலையில் உள்ள கையொப்பத்தையும் எங்கள் வங்கியில் உள்ள Specimen Signature -யையும் ஒப்பீடு செய்து தான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யும் போது பரிசீலனை செய்வோம். என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள எதிரியின் கையொப்பமும், எ.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள Specimen Signature-ல் உள்ள கையொப்பமும் பொருந்தவில்லை. மேற்படி எங்கள் வங்கியால் கொடுக்கப்பட்ட திருப்புதல் குறிப்பாணையில் போதிய பணம் இல்லை என்று தான் திருப்பப்பட்டுள்ளது. கையெழுத்து வேறுபாடு என்று குறிப்பிடவில்லை.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் எத்தனை வருடமாக பொள்ளாச்சி ஸ்டேட் பாங்க ஆப் இந்தியா வங்கி துணை மேலாளராக ஜுன் 2023 முதல் பணியாற்றி வருகிறேன். பு.சா.ஆ.1 காசோலை வசூலுக்கு தாக்கல் செய்த போது நான் மேற்படி வங்கியில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். பொதுவாக வங்கியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யும் காசோலையில் உள்ள கையொப்பமும், Specimen Signature-ல் உள்ள கையொப்பமும் சரியாக உள்ளதா என பரிசீலனை செய்த பிறகு தான் வங்கி கணக்கில் போதிய பணம் உள்ளதா ? இல்லையா? என்று பரிசீலனை செய்வோம் என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக காசோலையில் உள்ள கையெழுத்தும் Specimen Signature-ல் உள்ள கையொப்பமும் வேறுபட்டு உள்ளது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தங்கள் வங்கியால் கொடுக்கப்பட்ட விவரத்தின் படி தான் குறிப்பாணையில் போதிய பணமில்லை என திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த குறிப்பாணையில் Insufficient fund என்ற வார்த்தை காணப்படவில்லை. வசூலுக்கு தாக்கல் செய்யும் போது வங்கி கணக்கில் பணம் உள்ளதா? இல்லையா ? என்பது எனக்கு தெரியாது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.11.05 10:44:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்